*கவனிக்க.- 2016.04.29 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி II மற்றும் பகுதி IV (ஆ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1966 - 2016 මැයි මස 06 වැනි සිකුරාදා - 2016.05.06

*1966 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு மே மாதம் 06 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் |
|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 596 |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 597 |


**கவனிக்க.**- *ரஞ்சன் ராமநாயக்க பவுண்டேஷன் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2016, மாச்சு மாதம் 11 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.*

### *வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2016, மே மாதம் 27 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2016, மே மாதம் 13 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

***2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு***

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**டபிள்யூ. ஏ. ஏ. ஜீ. பொன்சேக்கா,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2016 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

*1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.*

*எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.*

*(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;*

*(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;*

*(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;*

*(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;*

*(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப்படுவர் ;*

*(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.*

*பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சாதிகாரி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை ஆணைக்குழுவால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.*

*1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.*

*2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.*

*3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.*

*4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.*

*5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.*

*6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.*

*7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.*

*8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.*

*9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.*

*10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.*

*11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.*

*12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.*

*13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.*

*14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.*

*15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.*

*16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.*

*பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்*

*(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.*

*(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.*

*(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.*

*(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.*

*(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.*

*(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.*

*(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.*

*(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.*

*(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.*

*(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.*

*(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.*

*(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.*

*பரீட்சை ஆணையாளர் நாயகம்.*

*இலங்கை பரீட்சைத் திணைக்களம்,*
*பெலவத்தை,*
*பத்தரமுல்லை.*

# பதவிகள் - வெற்றிடம்

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

முஸ்லிம் விவாக பதிவாளர் பதவி - களுத்துறை மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள முஸ்லிம் விவாக பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய முஸ்லிம் விவாகப் பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக முஸ்லிம் ஆண்கள் மட்டுமே விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமாக மேலதிக விபரம் உரிய மாவட்டச் செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2016, ஆனி மாதம் 06 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2016, ஏப்பிறல் 18.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| களுத்துறை | பேருவளை | தர்காநகர் பிரதேசத்தின் களுத்துறை மற்றும் பாணந்துறை பிரிவின் முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், களுத்துறை |

5-78

---

திருத்தம்

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிக்காக விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியை திருத்தம் செய்தல் - கண்டி மாவட்டம்

2016.02.26 ஆந் திகதிய 1956 ஆம் இலக்க வர்த்தமானப் பத்திரிகையில் என்னால் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலில் கீழ்க்குறிப்பிடப்படும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிக்காக விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியை 2016.05.30 ஆந் திகதி வரை நீடிக்கின்றேன்.

2. அவ்விண்ணப்பம் கோரப்படும் அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட ஏனைய விடயங்கள் அனைத்தும் அவ்விதத்திலேயே அதிகாரம் செலுத்தும் என தாழ்மையுடன் கருத்திற்கொள்ளவும்.

பதிவாளர் நாயகம்.

**அட்டவணை**

| *மாவட்டம்* | *பிரதேச செயலாளர் பிரிவு* | *விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும்* | *விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி* |
|---|---|---|---|
| கண்டி | அக்குறணை | அலவத்துகொட பிரதேசத்தின் ஹாரிஸ்பற்று பிரிவின் மேலதிக விவாக (கண்டிய/பொது) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், கண்டி |

5-80

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## இலங்கை-ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவகம் - மொரட்டுவை

(திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழிற்பயிற்சி அமைச்சு)

தேசிய தொழில் பயிலுனர் திட்டத்தின் கீழ் முழுநேரப் பயிற்சி நெறிக்கான அனுமதி - 2016

கீழ்க்காணும் ஆகக்குறைந்த தகைமைகளையுடைய ஆண்/ பெண் இருபாலாரிடமிருந்து 2016 ஆம் ஆண்டு அனுமதிக்கான விண்ணப் பங்கள் கோரப்படுகின்றன.

தேவையான ஆகக் குறைந்த தகைமைகள் வருமாறு :-

1. (அ) **வயது**.- 2016.03.31 ஆந் திகதியன்று 16 வயதிற்கும் 22 வயதிற்கும் இடைப்பட்டிருத்தல் வேண்டும்.

(ஆ) **கல்வி**.- க. பொ. த. (சா. த.) பரீட்சையில் தமிழ் அல்லது சிங்களம் (போதனாமொழி), கணிதம் உட்பட 6 பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

அல்லது

இலண்டன் சாதாரண தரப் பரீட்சையில் ஆங்கில மொழி, கணிதம் உட்பட 6 பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

***விசேட திறமை***.- மின்சாரவியல்/ இலத்திரனியல்/ இயந்திரவியல் துறைகளில் புதிய கண்டுபிடிப்புகளில் ஈடுபட்டு தேசிய/ மாகாண மட்டத்தில் இலங்கை புத்தாக்குநர் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட முதல் மூன்று இடங்களில் ஒன்றினைப் பெற்ற சான்றிதழுடன் (ஆ) கல்வித் தகைமையினை இரண்டுக்கு மேற்படாத அமர்வுகளில் பெற்றிருத்தல் வேண்டும்.

(இ) தேசிய தொழில் பயிலுநர் தொழிற்பயிற்சி அதிகார சபையில் 3 அல்லது அதற்கு மேற்பட்ட வருடங்களுக்கான பயிற்சியினைப் பெறுவோர் விண்ணப்பிப்பதற்கு தகுதியுடையோர் அல்லர்.

2. **பயிற்சி போதனைகள்**.- சிங்களத்தில் எல்லாப் பாடநெறிகளும் தமிழில் மோட்டார் இயந்திரவியல் பாடநெறி மாத்திரம் நடத்தப்படும். (ஆ) இலண்டன் சாதாரண தர பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் தமிழ் அல்லது சிங்கள மொழி மூலம் பயிற்சி பெறும் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3. **நுழைவுத் தேர்வு**.- தேவையான தகைமைகளையுடைய, கீழே 4 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சைக் கட்டணங்கள் செலுத்திய விண்ணப்பதாரிகள் மட்டும் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

**பரீட்சை நிலையம்**.- அனுமதிக்கான எழுத்துமூலப் பரீட்சை கொழும்பு, கண்டி, காலி, பதுளை, அநுராதபுரம், வவுனியா ஆகிய பரீட்சை நிலையங்களில் நடைபெறும். (போதியளவு பரீட்சார்த்திகள் இல்லாத நிலையங்களில் பரீட்சை இரத்துச்செய்யப்பட்டு அவர் விரும்பும் வேறு பரீட்சை நிலையத்தில் பரீட்சை எழுத அனுமதிக்கப்படுவர்.)

**எழுத்துமூலப் பரீட்சை**.- இப்பரீட்சை கணிதம், அடிப்படைத் தொழில்நுட்ப அறிவு, பொது அறிவு, ஆங்கிலம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட 2 வினாப்பத்திரங்களுக்கு விடையளித்தல் வேண்டும்.

4. **பரீட்சைக் கட்டணம்**.- விண்ணப்பதாரிகள் 500 ரூபா இலங்கை வங்கிக் கிளையில், கணக்கு இலக்கம் 681490, மொரட்டுவைக் கிளைக்கு வைப்பிலிட்டு அதற்கான பற்றுச்சீட்டின் பிரதியை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். அழிந்துபோன அல்லது வேறு மாற்றங்கள் செய்யப்பட்ட பற்றுச்சீட்டுக்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. பற்றுச்சீட்டு இணைக்கப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

அனுமதிப் பரீட்சைக்குத் தோற்றாத காரணத்தினாலோ அல்லது வேறு எந்தக் காரணத்தினாலோ பரீட்சைக் கட்டணம் மீளளிக்கப் படமாட்டாது என்பதை விசேடமாகக் கவனத்திற்கொள்க.

5. **ஆரம்பத் தேர்வு முறை**.- எழுத்து மூலப்பரீட்சையில் ஆகக்கூடிய புள்ளிகளைப் பெறுபவர்கள் மத்தியிலிருந்து திறமை அடிப்படையில் தகைமையுடையவர்கள் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவர். பின்தங்கிய மாவட்டங்களின் வெட்டுப்புள்ளி குறைக்கப்பட்டுள்ளது. (இவ்வெட்டுப்புள்ளி இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் நடைமுறைக்கேற்ப தீர்மானிக்கப்படும்.)

6. **இறுதித் தேர்வு முறை**.- நேர்முகப் பரீட்சைக்கு முன்பதாக செயல்முறைப் பரீட்சையொன்றுக்கு உட்படுத்தப்படுவர். செயல்முறை பரீட்சையின் 40% உம் நேர்முக பரீட்சையின் 60% உம் புள்ளிகளாக வழங்கப்படும். விளையாட்டு போன்ற சிறப்புத் தகைமைகள் இருந்தால் அவைகள் கவனத்தில் கொள்ளப்படும். பயிற்சிக்கு தெரிவுசெய்யப்படுவோர் வைத்திய பரீட்சைக்கு உட்படுத்தப்படுவர். இதில் சித்தியடையாதோர் பயிற்சியிலிருந்து நீக்கப்படுவர்.

7. **பயிற்சி நெறி** :

| | |
|---|---|
| மோட்டார் இயந்திரவியல் | - 04 ஆண்டுகள் |
| மில்றைற்/ வார்ப்பியல் | - 04 ஆண்டுகள் |
| காற்று பதனமாக்கல்/ குளிரூட்டல் | - 03 1/ 2 ஆண்டுகள் |
| வலு மின்சாரவியல் | - 03 1/ 2 ஆண்டுகள் |
| ஆயுத இயந்திரவியல் | - 03 1/ 2 ஆண்டுகள் |
| மெக்காற்றோனிக் (கைத்தொழில்) | - 03 1/ 2 ஆண்டுகள் |
| வாகன மின்சாரவியல் | - 03 ஆண்டுகள் |
| டீசல் இயந்திரவியல் | - 03 ஆண்டுகள் |
| உருக்கியிணைத்தல் | - 03 ஆண்டுகள் |

பொரளைக் கிளையில் :

| | |
|---|---|
| வாகன உடல் திருத்தலும் வர்ணம் தீட்டுதலும் | - 03 ஆண்டுகள் |
| வாகன மின்சாரவியல் | - 03 ஆண்டுகள் |

முதலாம் வருடம் நடத்தப்படும் அடிப்படை பயற்சியின் முடிவில் நடைபெறும் தொழிற்துறை தேர்வு பரீட்சையில் பெறப்படும் புள்ளிகளையும், ஆற்றல்களையும் அடிப்படையாகக் கொண்டே உமக்கான தொழிற்துறை தெரிவுசெய்யப்படும்.

8. **பிணை முறி கைச்சாத்திடல்**.- 4, 3 1/ 2, 3 வருட பயிற்சிக்கு தெரிவுசெய்யப்படுவோர் இ. ஜே. தொ. ப. நிறுவகத்துடனும் தேசிய தொழிற்பயிற்சி அதிகாரசபையுடனும், பயிற்சியினை திருப்திகரமாக பூர்த்தி செய்வேனென உடன்படிக்கை ஒன்றில் கைச்சாத்திடுதல் வேண்டும். அத்துடன் பயிற்சியின் பின்னர் கேட்டுக்கொள்ளப்பட்டால் இலங்கை போக்குவரத்து சபையில் குறைந்தது இரண்டு வருடங்கள் பணியாற்றுவேனெனவும் பிணைமுறி ஒன்றில் கைச்சாத்திடுதல் வேண்டும்.

கீழ்க்காணும் மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கேற்ப (ஏ4) அளவில் விண்ணப்பம் தயாரிக்கப்பட்டு, அதனுடன்-

(அ) பிறப்பு அத்தாட்சிப்பத்திரம் ;

(ஆ) கல்விச் சான்றிதழ் ;

(இ) இலக்கம் 1 இல் குறிப்பிடப்பட்டதற்கிணங்க இலங்கை புத்தாக்கங்கள் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட சான்றிதழ் ஆகிய ஆவணங்களின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும்.

தபால் உறையின் இடப்பக்க மேல் மூலையில் ‘‘முழுநேர பயிற்சிநெறிக்கு பயிலுனர்களைச் சேர்த்தல் 2016’’ எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

(விண்ணப்பப்படிவங்களை www.cgtti.lk என்னும் இணையத் தளத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.)

10. **விண்ணப்ப முடிவுத் திகதி**.- விண்ணப்பங்கள் 2016.06.20 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்பதாக முகாமையாளர்-மனித வளமும் நிர்வாகமும் அவர்களுக்குக் கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபால் மூலம் கீழேயுள்ள முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

11. **பரீட்சை அனுமதிப்பத்திரம்**.- தகைமையுள்ள பரீட்சார்த்திகளுக்கு 2016.08.10 ஆந் திகதியளவில் பரீட்சை அனுமதிப்பத்திரம் அனுப்பிவைக்கப்படும். மேற்படி பத்திரம் கிடைக்கப்பெறாதோர் இத்தினத்திலிருந்து 14 நாட்களுக்குள் கீழேயுள்ள தொலைபேசி இலக்கத்தினூடாக தொடர்புகொள்க.

12. பொரளை கிளைக்குப் பயிலுனர்களை இணைத்தல்.- மொரட்டுவை கிளைக்கு பயிலுனர்கள் இணைத்துக்கொள்ளப்பட்டு 3 மாதங்களில் மேற்கூறப்பட்ட பரீட்சை விதிகளுக்கேற்ப நடைபெறும்.

முகாமையாளர்,
மனித வளமும் நிர்வாகமும்,
இலங்கை ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவகம்.

இலங்கை - ஜேர்மன் தொழில் நுட்ப பயிற்சி நிறுவகம்,
இல. 582, காலி வீதி,
கல்கிசை.
தொலைபேசி இல. : 011-2605625.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை-ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவகம் - மொரட்டுவை**

தேசிய தொழில் பயிலுனர் திட்டத்தின் கீழ் முழுநேரப் பயிற்சி நெறிக்கான அனுமதி - 2016

| அலுவலக உபயோகத்திற்காக | Q | DQ | பரீட்சை இல. | | | | | | நேர்முகப் | | பயிலுனர் | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|

* ஆங்கிலத்தில் நிரப்பும்போது ஆங்கில பெரிய எழுத்துக்களை உபயோகிக்கவும்.

* கீழே (*) காட்டப்பட்டுள்ள இடத்தில் பொருத்தமான கூட்டினுள் ( ✓ ) எனும் அடையாளத்தினை இடவும்.

1. (அ) முழுப் பெயர் (தமிழில்) :

(ஆ) முழுப் பெயர் (ஆங்கிலத்தில்) :

(இ) முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கிலத்தில்) :

2. (அ) தபால் முகவரி (தமிழில்) :

(ஆ) தபால் முகவரி (ஆங்கிலத்தில்) :

(இ) மாவட்டம் : (ஈ) பிரதேச செயலகப் பிரிவு : (உ) மாகாணம்

(ஊ) மின்-அஞ்சல் முகவரி : (எ) தொலைபேசி இலக்கம் : நடமாடும் / வதிவிடம்

3. (அ) பிறந்த திகதி : (ஆ) 2016.03.31 ஆந் தினத்தில் வயது : வருடங்கள் / மாதங்கள் / நாட்கள்

(இ) தேசிய அடையாள அட்டை இலக்கம் : (ஈ) ஆண்/ பெண் (*) ஆண் / பெண்

4. கல்வித் தகைமை (க. பொ. த. சா. த.) :

| சுட்டெண் | | வருடம் | |
|---|---|---|---|
| பாடம் | | தரம் | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

இரண்டாவது அமர்வில் (விசேட திறமைக்கான சான்றிதழ் உள்ள விண்ணப்பதாரிகளுக்கு மாத்திரம்) :

| சுட்டெண் | | வருடம் | |
|---|---|---|---|
| பாடம் | | தரம் | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

5. விசேட திறமை அடிப்படையில் விண்ணப்பித்தால், இலங்கை புத்தாக்கங்கள் ஆணைக்குழுவினால் மாவட்ட/ தேசிய மட்டத்தில் சான்றிதழ் வழங்கப்பட்ட வருடமும் துறையும் :

வருடம் துறை

6. (அ) பிரவேசப் பரீட்சை எழுத விரும்பும் மொழி (*) சிங்களம் / தமிழ்

(ஆ) பிரவேசப் பரீட்சை எழுத விரும்பும் பரீட்சை நிலையம் (*)

| கொழும்பு | கண்டி | காலி | பதுளை | அனுராதபுரம் | வவுனியா |
|---|---|---|---|---|---|
| | | | | | |

7. (அ) கட்டணம் செலுத்திய இலங்கை வங்கிக் கிளை (அ) திகதி

என்னால் வழங்கப்பட்ட மேற்கூறிய விபரங்கள் அனைத்தும் உண்மையானவையும் சரியானவையும் என இத்தால் உறுதிப்படுத்துகின்றேன். இவ்விபரங்களில் ஏதாவது பொய்யாவையென தெரிவின் முன்போ பின்போ கண்டுபிடிக்கப்பட்டால் தகைமையற்றவனாகக் கருதப்படவோ அல்லது பயிற்சியிலிருந்து நீக்கப்படுவதற்கோ ஏதுவாவேன் என்பதையும் அறிவேன்.

விண்ணப்பதாரியின் கையொப்பம். திகதி

*அலுவலக உபயோகத்திற்கு மாத்திரம்*

| | | | |
|---|---|---|---|
| (අ) බැංකු ලදු පත අමුණා ඇත<br>(அ) வங்கியின் பற்றுச்சீட்டு | ඔව්<br>ஆம் | නැත<br>இல்லை | |
| (ආ) අධ්‍යාපන සහතික පිටපත් අමුණා ඇත<br>(ஆ) கல்விச் சான்றிதழின் பிரதி | ඔව්<br>ஆம் | නැත<br>இல்லை | |
| (ඇ) උප්පැන්න සහතිකයේ පිටපත අමුණා ඇත<br>(இ) பிறப்புச் சான்றிதழின் பிரதி | ඔව්<br>ஆம் | නැත<br>இல்லை | |
| (ඈ) අංක 05 යටතේ, විශේෂ දක්ෂතා සහතික අමුණා ඇත<br>(ஈ) இல. 5 இற்குரிய சான்றிதழின் பிரதி | ඔව්<br>ஆம் | නැත<br>இல்லை | අදාල නැත<br>பொருந்தவில்லை |
| (ඉ) වයස් සීමාව<br>(உ) வயதெல்லை | -16 | OK | 22+ |
| (ඊ) ප්‍රවේශ පරීක්ෂණය සඳහා සුදුසුකම් ලබා ඇත<br>(ஊ) நுழைவுத்தேர்வுக்குத் தகுதி பெற்றுள்ளாரா ? | ඔව්<br>ஆம் | නැත<br>இல்லை | |
| (උ) පරීක්ෂා කළේ<br>(எ) பரீட்சித்தவர் | | | |

*5-23*

---

## ***இரத்மலானை இலங்கை-ஜேர்மன் புகையிரதத் தொழில்நுட்ப பயிற்சி நிலையத்திற்கு பயிலுநர்களை சேர்த்துக்கொள்ளல் - 2016***

இரத்மலானை இலங்கை-ஜேர்மன் புகையிரதத் தொழில்நுட்ப பயிற்சி நிலையத்திற்கு 2016 ஆம் வருடத்திற்காக பயிலுநர்களைச் சேர்த்துக்கொள்வதற்காக இங்கு 2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டுள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. ***அடிப்படைத் தகைமைகள் :***

(அ) *வயது.-* 2016.05.31 ஆந் திகதியன்று வயது 16 இற்குக் குறையாமலும் 25 இற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும் ;

(ஆ) *கல்வித் தகைமைகள்.-* சிங்களம்/ தமிழ்/ ஆங்கில மொழி மற்றும் கணிதம் உட்பட ஏதேனும் 4 பாடங்களில் திறமைச் சித்தியுடன், 6 பாடங்களில் சித்தியடைந்திருப்பதுடன் க.பொ.த. (சா. த.) பரீட்சையில் இரு ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். ஒரே அமர்வில் க.பொ.த. (உ. த.) பரீட்சையில் பொது ஆங்கிலம் தவிர்ந்த கணித/ விஞ்ஞானப் பாடங்களில் சித்தியடைதல் வேண்டும்.

3. ***பயிற்சி நெறி.-*** பயிலுநர் பயிற்சிக்குத் தேர்ந்தெடுக்கப்படும் பயிலுனர்களுக்கு கீழ்க்காணப்படும் தொழிலும் அத்தொழிற் பயிற்சிக்கு உகந்த காலவெல்லைக்குள் கற்பதற்குமான வசதிகள் அளிக்கப்படும். பயிற்சிநெறிகள் சிங்கள மொழி மூலம் மாத்திரம் நடாத்தப்படுவதுடன் கீழ்க்காணப்படும் தொழில் பயிற்சிக்கு 25 பேர் வீதம் தேர்ந்தெடுக்கப்படுவர் :-

1. டீசல் என்ஜின் இயந்திர தொழில்நுட்பவியலாளர் - வருடம் 2 1/ 2 (NVQ 4 - பின் NVQ 6 இற்கு உயர்த்தப்படும்)
2. ஒட்டும் நுட்பவியலாளர்/ ஒட்டுநர் - வருடம் 3 (NVQ 4 - பின் NVQ 6 இற்கு உயர்த்தப்படும்)
3. மின் தொழில்நுட்பவியலாளர் (சக்தி) - வருடம் 3 1/ 2 (NVQ 4 - பின் NVQ 6 இற்கு உயர்த்தப்படும்)
4. இயந்திர தொழில்நுட்பவியலாளர் (பொது) - வருடம் 3 1/ 2 (NVQ 4 - பின் NVQ 6 இற்கு உயர்த்தப்படும்)

4. ***விண்ணப்பம்.-*** விண்ணப்பதாரர்கள் இத்துடன் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்பத்திரத்திற்கு ஏற்ற வகையில் (ஏ4) வெள்ளைத் தாளில் தயாரித்து சரியான முறையில் குறிப்பிடப்படல் வேண்டும். சரியான தகவல்கள் உள்ளடக்கப்படாத விண்ணப்பப்பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.

5. **பயிற்சிநெறிக்கு தேர்ந்தெடுத்தல்.-** (i) எழுத்து மூலமாகவும் செயல் மூலமாகவுமான பரீட்சிப்பின் மூலம் தேர்ந்தெடுக்கப் படுவதுடன் தேவைப்படும் அடிப்படைத் தகைமைகளைக் கொண்டுள்ளதும் கீழே 7 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தியுள்ள விண்ணப்பதாரர்கள் மட்டும் எழுத்துமூலமான பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

(ii) **எழுத்துமூலப் பரீட்சை.-** கணிதம், அடிப்படை தொழில்நுட்ப அறிவு மற்றும் பொது அறிவையும் அடிப்படையாகக் கொண்டு நடாத்தப்படும். எழுத்துமூலமான பரீட்சையில் அதிக புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரிகள் அந்தந்த பயிற்சிநெறிகளின் தன்மைக்கு ஏற்ப நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

(iii) எழுத்துமூல மற்றும் தொழில் தகைமை பரிசோதனைகளின் மூலம் அதிகூடிய புள்ளிகளைப் பெற்றுள்ள விண்ணப்பதாரிகள் அந்தந்த பயிற்சி நெறிக்கு தேர்ந்தெடுக்கப்படுவர்.

6. ***பரீட்சை மொழி மூலம்.-*** பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் நடாத்தப்படும்.

7. **பரீட்சைக் கட்டணம்.**- இப்பரீட்சைக்காக மீள வழங்கப்படாத 500 ரூபா பரீட்சைக் கட்டணமாக அறவிடப்படும். அக்கட்டணம் மருதானை தபால் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளக்கூடியவாறு புகையிரத பொது முகாமையாளரின் பெயருக்கு காசுக் கட்டளையாக செலுத்தப்படுதல் வேண்டும். அவ்வாறு செலுத்தப்பட்ட காசுக் கட்டளையை விண்ணப்பதாரியின் விண்ணப்பப்பத்திரத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். காசுக் கட்டளை இணைத்து அனுப்பப்படாத விண்ணப்பப்பத்திரங்கள் நிராகரிக்கப்படும். பரீட்சைக்குத் தோற்றாத காரணத்தினாலோ அல்லது வேறேதும் காரணத்திற்காகவோ பரீட்சைக் கட்டணம் மீள வழங்கப்படமாட்டாது என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

8. **பரீட்சை நிலையம்.**- சகல தகைமைகளையும் பூர்த்திசெய்த விண்ணப்பதாரர்களுக்கான எழுத்து மூலமான பரீட்சை கொழும்பில் உள்ள பரீட்சை நிலையத்தில் மாத்திரம் நடாத்தப்படும்.

9. **ஒப்பந்தம் கைச்சாத்திடல்.**- பயிற்சிக்காகத் தேர்ந்தெடுக் கப்படுகின்ற சகல விண்ணப்பதாரிகளும் பயிற்சிநெறிக்கான குறித்த காலவெல்லைக்குள் பயிற்சியைத் திருப்திகரமான முறையில் பயிலுவதாக தேசிய பயிலுநர் மற்றும் தொழில்நுட்ப பயிற்சி அதிகார சபையுடன் ஒப்பந்தமொன்றுக்கு இணங்குதல் வேண்டும்.

10. தேர்ந்தெடுக்கப்படும் பயிலுநர்களுக்கு தொழில் வழங்கப் படுவதற்கான உத்தரவாதம் திணைக்களத்தினால் வழங்கப்பட மாட்டாது.

11. கீழ்க்காணப்படும் மாதிரி விண்ணப்பப்பத்திரத்திற்கு ஏற்றவகையில் விண்ணப்பப்பத்திரத்தைத் தயாரித்து, "பணிப்பாளர், இலங்கை - ஜேர்மன் புகையிரத தொழில்நுட்ப பயிற்சி நிலையம், கல்தமுல்ல வீதி, இரத்மலானை" எனும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். (விண்ணப்பத்தை அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் 'இ.ஜே.தொ.ப.நி-2016' எனக் குறிப்பிடப்படல் வேண்டும்.

12. **விண்ணப்பப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி.**- விண்ணப்பப்படிவம் 2016.05.27 ஆந் திகதி வரை ஏற்றுக் கொள்ளப்படுவதுடன் தாமதித்து கிடைக்கும் விண்ணப்பப்பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.

பி. ஏ. பீ. ஆரியரத்ன,
புகையிரத பொது முகாமையாளர்.

புகையிரத பொது முகாமையாளர் அலுவலகம்,
இலங்கை புகையிரத சேவை,
கொழும்பு 10,
2016, ஏப்பிறல் 06.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை-ஜேர்மன் புகையிரதத் தொழில்நுட்ப பயிற்சி நிலையத்திற்காக பயிலுநர்களை சேர்த்துக்கொள்ளல் - 2016**

[ ]
(அலுவலக உபயோகத்திற்காக)

1. முழுப்பெயர் (சிங்களம்/ தமிழ்) :----.
(ஆங்கிலத்தில்) :----.

2. முகவரி (சிங்களம்/ தமிழ்) :----.

3. மாவட்டம் :----.

4. பிறந்த திகதி :----.

5. பால் (ஆண்/ பெண்) :----.

6. தொலைபேசி இலக்கம் :----.

7. கல்வித் தராதரம் (க. பொ. த. சாதாரண தரம்) :

முதல் அமர்வு

| | பாடம் | தரம் |
|---|---|---|
| 1. | ......................................... | ......................... |
| 2. | ......................................... | ......................... |
| 3. | ......................................... | ......................... |
| 4. | ......................................... | ......................... |
| 5. | ......................................... | ......................... |
| 6. | ......................................... | ......................... |
| 7. | ......................................... | ......................... |
| 8. | ......................................... | ......................... |
| 9. | ......................................... | ......................... |
| 10. | ......................................... | ......................... |

இரண்டாம் அமர்வு

| | பாடம் | தரம் |
|---|---|---|
| 1. | ......................................... | ......................... |
| 2. | ......................................... | ......................... |
| 3. | ......................................... | ......................... |
| 4. | ......................................... | ......................... |
| 5. | ......................................... | ......................... |
| 6. | ......................................... | ......................... |
| 7. | ......................................... | ......................... |
| 8. | ......................................... | ......................... |
| 9. | ......................................... | ......................... |
| 10. | ......................................... | ......................... |

8. விண்ணப்பதாரி பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :----.

9. விண்ணப்பம் கோரப்பட்டுள்ள வர்த்தமானிப் பிரசுரத்தின் மூலம் தனக்கு விருப்பமான தொழில் பயிற்சிகள் இரண்டை முறையாகக் குறிப்பிடவும் :

(1) :----.
(2) :----.

9. ............................................... தபால் அலுவலகத்திற்கு 500 ரூபாவைச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டின் இலக்கம் ......................................... ஐ உடைய காசுக் கட்டளையை இத்துடன் இணைத்துள்ளேன். (காசுக் கட்டளை கழராதவாறு இத்துடன் இணைக்கவும்).

10. மேற்குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானதெனவும் சரியானதெனவும் நான் உறுதிப்படுத்துகிறேன். இங்கு குறிப் பிடப்பட்டுள்ள தகவல்களில் ஏதேனும் தகவல்கள் தவறானதென நான் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு முன்பு கண்டுபிடிக்கப்பட்டால் நான் தகுதியற்றவனாகக் கருதப்படுவேன் எனவும் தேர்ந் தெடுக்கப்பட்டதன் பின்பு கண்டறியப்படுமிடத்து பயிற்சியிலிருந்து அகற்றப்படுவேன் என்பதையும் நான் நன்கறிவேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

5-19

## கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்

### கணக்காய்வு பரீட்சகர் சேவையின் கணக்காய்வு பரீட்சகர் தரம் II இற்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2016

கணக்காய்வு பரீட்சகர் சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பு 06(ii)(ஆ) பந்தியின் ஏற்பாடுகளின் பிரகாரம் அச்சேவையின் II ஆம் தரத்திற்கான பொருத்தமான ஆட்களைத் தெரிவுசெய்வதற்கு பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தால் ஒரு திறந்த போட்டிப் பரீட்சை நடாத்தப்படுவதுடன் இந்த அறிவுறுத்தலில் குறித்துரைக்கப்பட்டவாறு தேவையான தகைமைகளைக் கொண்டிருக்கும் பரீட்சார்த்திகளிட மிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**பரீட்சைத் திகதி.**- பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தால் 2016, செத்தெம்பர் மாதத்தில் கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் இந்தப் பரீட்சை நடாத்தப்படும். இந்த பரீட்சையை பிற்போடுவதற்கோ அல்லது இரத்துச் செய்வதற்கோ கணக்காய்வாளர் தலைமை அதிபதி அதிகாரங்களைக் கொண்டுள்ளார். பரீட்சைக்காக விண்ணப்பிக்கும் நகரத்தினை மாற்றுவதற்கு பின்னர் இடமளிக்கப்படமாட்டாது.

1. **நியமிக்கப்படவுள்ளவர்களின் எண்ணிக்கையும் நியமனம் அமுலாகும் திகதியும்.**- நியமனம் அமுலாகும் திகதி கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் தீர்மானிக்கப்படும். குறித்த சில எண்ணிக்கையான வெற்றிடங்களையோ அல்லது சகல வெற்றிடங்களையுமோ நிரப்பாது விடுவதற்கு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அதிகாரமுள்ளது.

2. **சேவை நிபந்தனைகள் :**

(i) அரசாங்க வர்த்தமானியின் பகுதி I : தொகுதி (IIஅ) இன் ஆரம்பத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ள அரசாங்க சேவை நியமனங்களை கட்டுப்படுத்தும் பொது நிபந்தனைகள், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 1985, திசெம்பர் 20 ஆந் திகதிய 380/61 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட கணக்காய்வு பரீட்சகர் சேவையின் சேவைப்பிரமாணக் குறிப்பில் குறித்துரைக்கப் பட்ட நிபந்தனைகள் மற்றும் அந்த குறிப்பிற்கு செய்யப்பட்ட அல்லது இதன் பின்னர் செய்யப்படவுள்ள ஏதாவது திருத்தங்கள் என்பவற்றுக்கிணங்க தெரிவுசெய்யப்பட்ட பரீட்சார்த்திகள் கணக்காய்வு பரீட்சகர் சேவையின் தரம் II இற்கு நியமனம் செய்யப்படுவர்.

(ii) இந்தப் பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரியதுமாகும். நீங்கள் நியமனம் பெற்ற திகதியிலிருந்து மாதாந்த உழைப்பின் ஏழு சதவீதம் (7%) விதவைகள் அநாதைகள் ஓய்வூதிய நிதியத்திற்கு செலுத்துவதற்கு நீங்கள் வேண்டப்படுவீர்கள்.

(iii) பதவிக்கு ஆட்சேர்த்துக்கொள்வதற்கு தகைமை பெறும் பரீட்சார்த்திகள் நியமனத் திகதியிலிருந்து மூன்று ஆண்டுகள் கொண்ட காலப்பகுதிக்கு தகுதிகாண் சேவைக்கு உட்பட்டு சேவையில் நியமிக்கப்படுவர்.

(iv) பதவிக்கு சேர்த்துக்கொள்ளப்படும் விண்ணப்பதாரிகள் அவர்களது தகுதிகாண் காலப்பகுதியின் முடிவில் பதவியில் உறுதிப்படுத்தப்படுதல் பின்வரும் காரணிகளில் தங்கி யுள்ளது :-

(அ) கடமைகள், வருகை மற்றும் நடத்தைகள் திருப்திகரமாக இருத்தல் ;

(ஆ) தகுதிகாண் காலப்பகுதி முடிவடைவதற்கு முன் வினைத்திறமைகாண் தடைப்பரீட்சையில் சித்தி யடைதல்.

(v) தகுதிகாண் காலப்பகுதியின் இறுதியில் பதவியில் உறுதிப்படுத்தப்படுவதற்கு தவறுமிடத்து அவருடைய சேவை முடிவிற்குக் கொண்டுவரப்படும்.

(vi) பதவிக்கு சேர்த்துக்கொள்ளப்பட்ட பின்னர் ஐந்து (05) ஆண்டுகளுக்குள் 2014, சனவரி 21 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் பிரகாரம் அரச கரும மொழியில் நிபுணத்துவத்தினை பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

(vii) தெரிவுசெய்யப்படும் உத்தியோகத்தர்கள் நாட்டின் எப்பாகத்திலும் பணியாற்றும் நிபந்தனைக்கு உட்படுவர்.

(viii) அரசாங்க சேவைகள் ஆணைக்குழு ஒழுங்குவிதிகள், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை, அரசாங்க நிதிப்பிரமாணங்கள் மற்றும் அரசாங்கத்தினால் காலத்திற்குக் காலம் வெளியிடப்படு கின்ற விதிகள் மற்றும் பிரமாணங்கள் அத்துடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதித் திணைக்களத்தினால் அவ்வப்போது வெளியிடப்படுகின்ற சுற்றறிக்கைகள், அறிவுறுத்தல்கள் மற்றும் பணிப்புரைகளுக்கும் இப்பதவி கடப்பாடுடையதாகும்.

3. **சம்பள அளவுத் திட்டம்.**- கணக்காய்வு பரீட்சகர் சேவையின் தரம் II தொடர்பான திரட்டிய சம்பள அளவுத்திட்டம் 03/2016 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றுநிருபத்தின் MN 5-2016 குறியீட்டு இலக்கத்தின் பிரகாரம் மாதாந்தம் ரூபா 34,605 - 10 x 660 - 11 x 755 - 15 x 930 ரூபா 63,460 ஆகும். (ரூபா 36,585 இற்கு முன்னர் வினைத்திறமைகாண் தடையுள்ளது.) இருப்பினும், அச்சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் அதன் II ஆம் பட்டோலையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறே உங்களுக்குச் சம்பளம் செலுத்தப்படும்.

4. **சுகாதாரமும் ஒழுக்கமும்.**- பரீட்சார்த்தி நல்ல உடலா ரோக்கியமும் சிறந்த ஒழுக்கப் பண்பும் உடையவரென்று கணக்காய்வாளர் தலைமை அதிபதி திருப்தியடைதல் வேண்டும். பரீட்சார்த்தி நல்ல தேகாரோக்கியத்தினையும் சிறந்த கண் பார்வையினையும் கொண்டிருக்க வேண்டும் என்பதுடன் தீவின் எந்த பாகத்திலும் சேவையாற்றுவதற்கான உடலியல் தகைமையினைக் கொண்டிருத்தலும் வேண்டும். தற்போதைக்கு அரசாங்க சேவையில்/மாகாண அரசாங்க சேவையில் இல்லாத பரீட்சார்த்தி ஒருவர் தெரிவுசெய்யப்பட்டால் அவர் ஒரு மருத்துவ பரிசோதனைக்கு தோற்றுதல் வேண்டும்.

5. **தகைமைகள்.**- எல்லா பரீட்சார்த்திகளும்,

(அ) இலங்கைப் பிரசையாக இருக்க வேண்டும் ;

(ஆ) விண்ணப்பம் ஏற்கப்படும் இறுதித் திகதியில், அரசாங்க/ மாகாண அரசாங்க சேவையில் இல்லாத விண்ணப்பதாரிகள் 22 வயதிற்கு குறையாதவராகவும் 32 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். அரசாங்க சேவையில் உள்ள விண்ணப்பதாரிகள் 40 வயதிற்கு மேற்படாதவர்களாக இருத்தல் வேண்டும் ;

(இ) பரீட்சார்த்தி சிறந்த ஒழுக்கப் பண்பும் நல்ல உடலா ரோக்கியமும் உடையவராகவும் இருத்தல் வேண்டும் ;

(ஈ) பின்வரும் தகைமைகளில் ஒன்றைப் பெற்றிருத்தல் வேண்டும் :-

(i) அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக்கழகத்தின் பட்டதாரியாக அல்லது இதற்கு ஒப்பான தகைமையைப் பெற்றிருத்தல் ;

அல்லது

(ii) இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் நிறுவகத்தின் தராதரப்பத்திர ("லைசன்சியேட்") அல்லது இடைமட்ட ("இன்டமீடியட்") பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ;

(iii) இலங்கை தொழில்நுட்ப கல்லூரி/ இலங்கை உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவகத்தின் உயர் தேசிய கணக்கியல் அல்லது வணிக டிப்ளோமாவில் சித்திபெற்றிருத்தல்.

(உ) ஏதேனும் சமயப் பிரிவொன்றில் பதவியொன்றை வகிக்கும் எவரும் இப்பரீட்சைக்கு தோற்ற அனுமதிக்கப்படமாட்டார்.

**குறிப்பு**.- இந்தப் பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரிகள் தங்களது கல்வி மற்றும் தொழில்சார் தகைமைச் சான்றிதழ்களையும் ஏனைய ஆவணங்களையும் கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் கோரப்படுகையில் சமர்ப்பிப்பதற்காக தயார் நிலையில் வைத்திருத்தல் வேண்டும். பரீட்சையொன்றின் பெறுபேற்றை எதிர்பார்த்து விண்ணப்பிக்க முடியாது.

**குறிப்பு**.- பரீட்சார்த்தி ஒருவர் தகைமை உள்ளவர் எனக் கருதப்படுவது அவரால்,

(i) பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கான தகைமையாகக் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையை அல்லது பரீட்சைகளை 2016, யூன் 7 ஆந் திகதியில் சகல விதத்திலும் வெற்றிகரமாகப் பூரணப்படுத்தி இருத்தல்,

அத்துடன்

(ii) தகைமைகளுக்கான உத்தியோகபூர்வ சான்றிதழ்கள் அல்லது அச்சான்றிதழ்களுக்காக கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் ஏற்றுக்கொள்ளப்படும் உத்தியோகபூர்வ ஆவணமொன்றை நேர்முகப் பரீட்சையின்போது சமர்ப்பித்தால் மாத்திரமேயாகும்.

6. **பரீட்சைக் கட்டணம்**.- பரீட்சைக் கட்டணம் ரூபா 600 ஆகும். இதற்கான கட்டணம் வருமானத் தலைப்பு 2003-02-13 இற்கு வரவு வைக்கப்படும் வகையில் விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் நாட்டிலுள்ள எந்தவொரு தபால்/ உப தபால் அலுவலகத்திற்கு செலுத்தப்பட்டு உங்களது பெயருக்கு பெற்றுக் கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டை விண்ணப்பத்தின் உரிய இடத்தில் ஒட்டி அனுப்பிவைத்தல் வேண்டும். இப்பரீட்சைக்காக செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணம் எக்காரணத்திற்காகவும் முழு அளவிலோ அல்லது பகுதியளவிலோ மீளச் செலுத்தப்படமாட்டாது. (பணம் செலுத்திப் பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியொன்றை உங்கள் வசம் வைத்திருப்பது உகந்ததாகும்). அத்துடன் பரீட்சைக் கட்டணத்துக்காக முத்திரைகள் அல்லது காசுக்கட்டளைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது ;

7. **விண்ணப்பிக்கும் முறை**.- (அ) விண்ணப்பம் இந்த அறிவுறுத்தலுடன் இணைக்கப்பட்ட மாதிரி விண்ணப்பப் படிவத்தின்படி தாளின் இரு பக்கங்களையும் பயன்படுத்தி ஏ4 அளவுத்தாளில் தயாரிக்கப்பட்டு பரீட்சார்த்தி தனது சொந்தக் கையெழுத்தினால் நிரப்புதல் வேண்டும். 1 முதல் 4 வரையான தலைப்புகள் முதலாம் பக்கத்திலும் 5 முதல் 6 வரை இரண்டாம் பக்கத்திலும் 7 முதல் 9 வரை மூன்றாம் பக்கத்திலும் 10 முதல் 12 வரையான தலைப்புகள் நான்காம் பக்கத்திலும் உள்ளடக்கப்பட்டு விண்ணப்பப்படிவம் தயாரிக்கப்பட்டிருத்தல் வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவுறாத விண்ணப்பங்கள் பூரணமற்ற தகவல்கள் வழங்கப்பட்டுள்ள விண்ணப்பங்கள் முன்னறிவித்தலின்றி நிராகரிக்கப்படும். பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பத்தின் நிழற்படப் பிரதியொன்றை தன்வசம் வைத்திருத்தல் உகந்ததாகும்.

(ஆ) விண்ணப்பம் பரீட்சார்த்தி பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகுதிபெற்ற மொழியில் பூர்த்தி செய்யப்பட வேண்டும். (11 ஆம் பந்தியைப் பார்க்க) விண்ணப்பத்தினை தயாரிக்கையில் அதன் தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையின் பெயர் சிங்கள விண்ணப்பங்களில் சிங்களத்திற்கு மேலாக ஆங்கிலத்திலும் தமிழ் விண்ணப்பங்களில் தமிழிற்கு மேலாக ஆங்கிலத்திலும் எழுதப்படுதல் வேண்டும்.

(இ) திறந்த போட்டிப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் 2016, யூன் 07 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் பெறக்கூடிய வகையில் "பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளை, இலங்கை பரீட்சைகள் திணைக்களம், த. பெ. இல. 1503, கொழும்பு" என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பிவைக்கப்பட வேண்டும்.

விண்ணப்பத்தைக் கொண்டுள்ள கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "கணக்காய்வுப் பரீட்சகர் தரம் II இற்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2016" என்று தெளிவான எழுத்தில் எழுதப்பட வேண்டும். இத்திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. அரசாங்க சேவையில்/ மாகாண அரசாங்க சேவையிலுள்ள பரீட்சார்த்திகள் தங்களது விண்ணப்பத்தை தமது திணைக்களத் தலைவர்/நிறுவனத் தலைவர் ஊடாக சமர்ப்பித்தல் வேண்டும்.

(ஈ) ஒவ்வொரு விடயத்திலும் பூர்த்திசெய்யப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். தபாலில் விண்ணப்பங்கள் தொலைந்துபோனமை அல்லது தாமதமடைந்துவிட்டமை போன்ற முறைப்பாடுகள் எதுவும் கருத்திற்கொள்ளப்பட மாட்டாது. மேலும், பரீட்சார்த்தி பரீட்சைக்கு அனுமதிக்கப்படுவது அதற்கான ஏற்றுக்கொள்ளப்பட்ட தகைமையாக அமையாது. இவ்வாறு அனுமதிக்கப்படுவது தற்காலிகமானதாகவும் பின்னர் அவசியமான பரிசோதனைகளுக்கு உட்பட்டதுமாகும்.

(உ) விண்ணப்பம் கிடைக்கப்பெற்றமை பற்றி அறிவிக்கப்பட மாட்டாது. விண்ணப்பதாரருக்கு அனுமதி அட்டைகள் அனுப்பப்பட்டதும், செய்திப்பத்திரிகைகளில் அது பற்றி இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தினால் அறிவித்தல் கொடுக்கப்படும். அறிவித்தல் வழங்கப்பட்டு 2 அல்லது 3 நாட்களுக்குப் பின்னரும் அனுமதி அட்டை கிடைக்கப்பெறாத விண்ணப்பதாரர்கள் அறிவித்தலில் குறிப்பிடப் பட்டவாறு அது தொடர்பில் பரீட்சைகள் திணைக்களத்திற்கு அறிவித்தல் வேண்டும். உங்களிடம் வைத்துக்கொள்ளப்பட்ட விண்ணப்பத்தின் பிரதி, பரீட்சைக் கட்டணம் செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டின் பிரதி, விண்ணப்பத்தினை பதிவுத்தபாலில் அனுப்புகையில் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டு என்பவற்றுடன் உங்களது முழுப்பெயர், முகவரி, தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் பரீட்சையின் பெயரினை சரியாகக் குறிப்பிட்டு விண்ணப்பதாரிகளால் விசாரணை செய்தல் வேண்டும். நீங்கள் கொழும்பிற்கு வெளியேயுள்ள பிரதேசத்தினைச் சேர்ந்தவராயின் தொலைநகல் மூலம் பரீட்சை அனுமதி அட்டையை அனுப்பி வைப்பதற்காக உங்களது தொலைநகல் இலக்கம் மற்றும் மேற்படி விபரங்களைக் குறிப்பிட்டு தொலைநகல் மூலம் இலங்கை பரீட்சைகள் திணைக்களத்திடம் விசாரிப்பது பயனுள்ளதாகும்.

(ஊ) பரீட்சை விண்ணப்பத்தில் மற்றும் பரீட்சை அனுமதி அட்டையில் கையொப்பத்தினை உறுதிப்படுத்துவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவரினால் விண்ணப்பதாரரின் கையொப்பம் அத்தாட்சிப் படுத்தப்படல் வேண்டும். ஏற்கனவே அரசாங்க அல்லது மாகாண அரச சேவையில் உள்ள விண்ணப்பதாரர்களின் கையொப்பங்கள் உரிய திணைக்களத் தலைவர்களால் அல்லது அவர் சார்பில் அவ்வாறு செய்வதற்கு அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஒருவரினால் அத்தாட்சிப்படுத்துதல் வேண்டும். ஏனைய விண்ணப்பதாரர்களின் கையொப்பங்கள், சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர்,

சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிசு, அரசாங்க பாடசாலையொன்றின் அதிபர், (ஆண்டிற்கு 2,40,360 ரூபா அல்லது அதற்கு மேற்பட்ட சம்பளம் பெறும்) அரசாங்க உத்தியோகத்தர் ஒருவர், பௌத்த விகாரை ஒன்றின் பிரதம குரு அல்லது உயர் ஸ்தானத்தில் உள்ள குரு, ஏனைய வேறு மதத்தைச் சார்ந்த வணக்கத் தலத்துக்குப் பொறுப்பாக இருக்கும் அல்லது அத்தகைய வணக்கத் தலங்களில் முக்கிய பதவி வகிக்கும் குரு, முப்படைகளில் ஆணைபெற்ற அலுவலர் ஒருவர், பொலிஸ் சேவையில் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட பதவியில் உள்ள அலுவலர் ஒருவரால் சான்றுறுதிப்படுத்தப்பட வேண்டும்.

8. **பரீட்சைக்கு அனுமதி**.- (அ) விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்ற ஒவ்வொருவருக்கும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் அனுமதி அட்டையொன்று அனுப்பி வைக்கப்படும். பரீட்சைக்குத் தோற்றுகின்ற ஒவ்வொருவரும் தமக்குரிய பரீட்சை மண்டபத்தில் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும் என்பதுடன் அவ்வாறு தோற்றுகின்ற முதல் நாளன்றே தமது கையொப்பத்தினை உறுதிப்படுத்திக் கொண்ட அனுமதி அட்டையை மண்டபத் தலைவருக்கு சமர்ப்பித்தல் வேண்டும். தமது அனுமதி அட்டையை சமர்ப்பிக்கத் தவறுகின்ற பரீட்சார்த்திக்கு பரீட்சைக்குத் தோற்ற அனுமதி அளிக்கப்பட மாட்டாது.

(ஆ) சகல பரீட்சார்த்திகளாலும் பின்பற்றப்பட வேண்டிய ஒழுங்குவிதிகளின் கோவையொன்று இந்த வர்த்தமானியின் ஆரம்பத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

(இ) பரீட்சார்த்தி ஒருவருக்கு அனுமதி அட்டையொன்று வழங்கப்படுதல், அவருக்கு பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தேவையான தகைமைகள் உண்டென ஏற்றுக்கொள்ளப்பட்டதாக கருதப்படுதல் கூடாது.

(ஈ) பரீட்சைகள் நடாத்தப்படுவது தொடர்பாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் விதிகளுடன் இணங்கி நடப்பதற்கு பரீட்சார்த்திகள் பணிக்கப்படுகின்றனர். இவ்விதிகளில் எவற்றையும் மீறுகின்ற பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் தண்டனைக்கு ஆளாகலாம்.

9. **பரீட்சார்த்தியின் ஆள் அடையாளம்**.- பரீட்சார்த்தி ஒருவர் தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும், பரீட்சை மண்டப மேற்பார்வையாளர் திருப்திப்படும் வகையில் தமது ஆள் அடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். இந்த நோக்கத்திற்காக பின்வரும் ஆவணங்களில் ஒன்று மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும் :-

(அ) ஆட்பதிவுத் திணைக்களத்தால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை ;

(ஆ) குடிவரவு, குடியகல்வு திணைக்களத்தால் வழங்கப்பட்ட செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

10. **பொய்யான தகவல்களை வழங்குதல்**.- பரீட்சார்த்தி ஒருவர் தகைமையற்றவர் எனக் கண்டுபிடிக்கப்பட்டால் பரீட்சைக்கு முன் அல்லது பரீட்சையின்போது அல்லது பரீட்சைக்குப் பின்னர் எந்தக் கட்டத்திலும் அவருடைய பரீட்சார்த்தித் தகைமை இரத்துச் செய்யப்படுவதற்கு இடமுள்ளது. பரீட்சார்த்தி ஒருவரால் தரப்பட்ட விபரங்கள் அவருடைய அறிவுக்கு எட்டியவரை பொய் எனக் காணப்பட்டால் அல்லது அவர் முக்கிய விடயமொன்றை வேண்டுமென்றே மறைத்துவிட்டார் எனக் காணப்பட்டால், அவர் அரசாங்க சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கு இடமுள்ளது.

11. **பரீட்சை முறை**.- (அ) பரீட்சை தமிழ், சிங்களம் மற்றும் ஆங்கில மொழிகளில் நடாத்தப்படும்.

(ஆ) பரீட்சார்த்தி ஒருவர், அவர் இப்பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கு தகைமைபெற்ற பரீட்சைக்குத் தோற்றிய மொழியில் அல்லது அரச கரும மொழியில் மாத்திரம் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும் ;

(இ) பரீட்சார்த்தி ஒருவர், அவர் தகைமை பெற்ற பரீட்சையின் பாடங்களை இரண்டோ அல்லது அதற்கு மேற்பட்ட மொழிகளிலோ சித்தியடைந்திருப்பின் அவர் அப்பரீட்சையின் பெரும்பான்மையான பாடங்களில் எம்மொழியில் சித்தியடைந்துள்ளாரோ அம்மொழியில் அல்லது அரச கரும மொழியில் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும் ;

(ஈ) பிரதான பாடம் ஒரு மொழியிலும், துணைப் பாடங்கள் இன்னொரு மொழியிலும் சித்தியடைந்துள்ள சிறப்புப் பட்டம் பெற்ற பரீட்சார்த்தி ஒருவர், அவர் பிரதான பாடத்தை எம்மொழியில் சித்தியடைந்தாரோ அம்மொழியில் அல்லது அரச கரும மொழியில் இப்பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும். தமது விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்ட பரீட்சை மொழியை மாற்றுவதற்கு பரீட்சார்த்திக்கு இடமளிக்கப்பட மாட்டாது.

**குறிப்பு**.- (i) மேலே (அ) மற்றும் (இ) இல் 'தகைமை பெற்ற' பரீட்சை என்ற சொற்றொடர் மேலே 5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட பரீட்சைகளில் ஒன்றாகும்.

(ii) பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சையின் எல்லா வினாத்தாள்களுக்கும் ஒரே மொழியில் விடையளித்தல் வேண்டும்.

12. **பரீட்சிக்கும் முறை**.- (அ) பின்வரும் ஐந்து பாடங்களுக்காக நடாத்தப்படும் எழுத்துமூல பரீட்சை மூலமும் நேர்முகப் பரீட்சை ஒன்றின் மூலமும் :-

| | பாடம் | காலம் (மணித்தியாலம்) | மொத்தப் புள்ளிகள் |
|---|---|---|---|
| (1) | கணக்கியல் | 03 | 150 |
| (2) | கிரயக் கணக்கியல் | 02 | 100 |
| (3) | கணக்காய்வு | 03 | 150 |
| (4) | வணிகக் கணிதமும் புள்ளிவிபரவியலும் | 02 | 100 |
| (5) | சுற்றாடல் : 1 ஆம் பகுதி - பொருளியல் | 01 | 50 |
| | 2 ஆம் பகுதி - பொது வர்த்தக அறிவு | 01 | 50 |
| | 3 ஆம் பகுதி - வர்த்தகச் சட்டம் | 01 | 50 |

எழுத்துப் பரீட்சைக்கான பாடத்திட்டம் பின்னிணைப்பு "அ" இல் தரப்பட்டுள்ளது.

(ஆ) எழுத்துப் பரீட்சையில் ஒவ்வொரு வினாப்பத்திரத்துக்கும் ஆகக்குறைந்தது 40 சதவீத புள்ளிகளையும் மொத்தப் பரீட்சையில் ஆகக்குறைந்தது 50 சதவீத சராசரி புள்ளியையும் பெறும் பரீட்சார்த்திகள் மட்டுமே நேர்முகப் பரீட்சைக்கு தோற்றத் தகுதி பெறுவதுடன் இப்பரீட்சைக்குப் பின்னர் அறிவிக்கப்பட்ட ஒரு திகதியில் நேர்முகப் பரீட்சை நடைபெறும். பரீட்சார்த்திகளின் கல்வித் தகைமைகள், சான்றிதழ்கள் மற்றும் சேவைப் பதிவேடுகளைப் பரீட்சிப்பதற்கு மாத்திரமே நேர்முகப் பரீட்சை நடாத்தப்படுவதுடன் நேர்முகப் பரீட்சைக்காக புள்ளிகள் வழங்கப்படமாட்டாது. நேர்முகப் பரீட்சைக் குழு கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் நியமிக்கப்படும்.

13. **நியமனத்திற்காக தெரிவுசெய்யப்படும் நடைமுறை**.- எழுத்துப் பரீட்சையில் 5 வினாத்தாள்களுக்காகவும் பெற்றுக் கொள்ளப்பட்ட புள்ளிகளின் அடிப்படையில் ஆகக்கூடிய புள்ளிகளைப் பெற்றுள்ள பரீட்சார்த்திகள் தெரிவுசெய்யப்படுவார்கள். பல பரீட்சார்த்திகள் ஒரே அளவு புள்ளிகளைப் பெற்றிருப்பின் தெரிவுசெய்வதற்கான இறுதித் தீர்மானம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் எடுக்கப்படும்.

14. 12(ஆ) பந்தியின் பிரகாரம் தகைமைபெற்ற பரீட்சார்த்திகளின் பெயர்கள் அடங்கிய பெறுபேற்று அட்டவணை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்கப்பட்டதன் பின்னர் பரீட்சைக்குத் தோற்றிய சகல விண்ணப்பதாரிகளுக்கும் பெறுபேறுகள் தபாலின் மூலம் அல்லது www.result.exams.gov.lk என்ற திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தின் ஊடாக அறிவிக்கப்படும்.

15. மேற்படி பிரமாணங்களில் உள்ளடக்கப்படாத விடயங்கள் சம்பந்தமாக எழும் பிரச்சினைகள் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் முடிவே இறுதி முடிவாகும்.

16. இந்த அறிவித்தல் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி பெயர்ப்புகளுக்கிடையே எவையேனும் இணக்கமின்மைகள் காணப்பட்டால் சிங்கள அறிவித்தலின் விடயங்களே மேலோங்கும்.

எச். எம். காமினி விஜயசிங்ஹ,
கணக்காய்வாளர் தலைமை அதிபதி.

கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்,
இல. 306/72, பொல்துூவ வீதி,
பத்தரமுல்லை,
2016, ஏப்பிறல் 19.

**பின்னிணைப்பு "அ"**

**எழுத்துப் பரீட்சையின் பாடத்திட்டம் :**

(i) ***கணக்கியல்.*** - பின்வரும் விடயங்கள் தொடர்பாக 3 மணித்தியாலங்களிலான ஒரு வினாத்தாள் (150 புள்ளிகள்) :

* *கணக்கியல் கோட்பாடு.-* அடிப்படை எடுகோள்கள் மற்றும் தத்துவங்கள், சொத்து மதிப்பீட்டு முறைமைகள், இரட்டைப் பதிவுக் கோட்பாடு, கிரயத்தின் வகைகள், ஐந்தொகையின் தகவல்களை வகைப்படுத்தல் மற்றும் உற்பத்தி வியாபார, இலாப நட்டக் கணக்குகள் என்பவற்றின் பொதுவான புரிந்துணர்வு.

* *கணக்கியல் நடைமுறை.-* ஒரு கணக்கீட்டு உரிமத்தில் பயன்படுத்தப்படும் வளங்களில் மாற்றங்களைக் கட்டுப்படுத்துவதற்குத் தேவையான அடிப்படைக் கட்டுப்பாட்டுக் கோட்பாடு, நியமங்களுடன் ஒப்பிடுவதற்கான தேவை, வர்த்தகக் கொடுக்கல் வாங்கல்களின் பகுப்பாய்வு, கொள்வனவு விற்பனை, பணத்தின் பெறுவனவு மற்றும் கொடுப்பனவு, பதிவேட்டுப் பொருட் கட்டுப்பாடு முதலியவாறான அடிப்படை முகாமைத்துவ செயற்பாடுகளைக் கட்டுப்படுத்தும் நடைமுறைகளை நன்கு தெரிந்திருத்தல், கணக்கறிக்கைகள், நாட்பதிவுப் புத்தகங்கள், பேரேடுகள், கட்டுப்பாட்டுக் கணக்குகள் முதலியவற்றின் வித்தியாசமான வடிவமைப்புக்களைத் தெரிந்திருத்தல் என்பனவற்றின் புரிந்துணர்வு.

* ஐந்தொகை, உற்பத்தி, வியாபார இலாப நட்டக் கணக்குகள், கணக்கிணக்கக் கூற்றுக்கள், கட்டுப்பாட்டுக் கணக்குகள் முதலியன, கணக்கீடு மற்றும் புள்ளிவிபர விகிதங்கள் என்பவற்றைத் தயாரிப்பது உட்பட கணக்கியல் நடைமுறைச் சிக்கல்கள்.

(ii) ***கிரயக் கணக்கியல்.*** - பின்வரும் விடயங்கள் தொடர்பாக 2 மணித்தியாலங்களிலான ஒரு வினாத்தாள் (100 புள்ளிகள்) :

* கிரயவியல் தத்துவங்கள், கிரயவியல் வகைகள், கொள்வனவு மற்றும் களஞ்சிய நடைமுறை, பொருட்கள், பொருட்களை விலையிடல், பொருள் வழங்கலின் விலைகுறித்தல், கூலிகள், மேந்தலைகள், நிலையான மற்றும் மாறும் செலவுகள், நேர் மற்றும் நேரில் செலவுகள், பாதீட்டுக் கட்டுப்பாடு, நியமக் கிரயவியல், முரண்கள், எல்லைக் கிரயவியல், ஒப்பந்தக் கிரயவியல், செயல்முறை கிரயவியல், துண்டு வேலைக் கிரயவியல், போக்குவரத்துக் கிரயவியல், வெளியீட்டுக் கிரயவியல் என்பவற்றின் கொள்கைகள்.

(iii) ***கணக்காய்வு.*** - பின்வரும் விடயங்கள் தொடர்பாக 3 மணித்தியாலங்களிலான ஒரு வினாத்தாள் (150 புள்ளிகள்) :

* *கணக்காய்வு எண்ணக் கருக்களும் கோட்பாடுகளும்.-* கணக்காய்விற்கான தேவை, கணக்காய்வுக்கான அடிப்படையான கணக்குகளின் தகைமை, கணக்காய்வின் நோக்கெல்லை, கணக்காய்வு வகைகள், கணக்காய்வுக் காலம், கணக்காய்வாளர்களின் தகைமைகள், அதிகாரங்கள், கணக்காய்விற்கான அதிகாரம், முன் கணக்காய்வு, உள்ளகச் செவ்வை, உள்ளகக் கட்டுப்பாடு, ஆழமான கணக்காய்வு, உள்ளகக் கணக்காய்வு, நியமங்களிற்கான தேவை, கணக் காய்வுச் சான்றுகளின் வகைகள், கணக்காய்வு தொழில்நுட்ப முறைகள் என்பன.

* *கணக்காய்வு முறைமைகளும் நடைமுறையும்.-* பிரதான ஐந்தொகை, உற்பத்தி வியாபார, இலாப நட்டக் கணக்கு விடயங்கள், காணி, கட்டிடங்கள், நிலையான சொத்துக்கள், பதிவேட்டுப் பொருட்கள், நிதிசார் சொத்துக்கள், விற்பனைகள், கொள்வனவுகள், பெறுகைகள், கொடுப்பனவுகள் முதலியவற்றை உள்ளடக்கிய கணக்காய்வு நிகழ்ச்சித் திட்டங்களைத் தெரிந்திருத்தல்.

* *கணக்காய்வுச் சிக்கல்கள்.-* அவதானிப்புத் திறைமையைப் பரீட்சிப்பதற்கான இலகுவான சிக்கல்கள், வழுக்களையும், அசாதாரண நிலைமைகளையும் கண்டுபிடிக்கும் புத்திசாதுரியம்.

* கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பணிகள்.

(iv) ***வணிகக் கணிதமும் புள்ளிவிபரவியலும்.*** - வணிகக் கணிதமும் புள்ளிவிபரவியல் தொடர்பான 2 மணித்தியாலங்களிலான ஒரு வினாத்தாள் (100 புள்ளிகள்)

*கணிதம் :*

* *சமன்பாடுகள்.-* வரைபடத் தீர்வுகள் உட்பட ஒருபடி மற்றும் இருபடிச் சமன்பாடுகள்
* *தொடர்கள்.-* கூட்டல் விருத்தியும் பெருக்கல் விருத்தியும், கழிவிடுதல் உட்பட சாதாரண வட்டியும் கூட்டு வட்டியும்
* வரிசை மாற்ற ஒழுங்கமைவுகளும் சேர்வைகளும் உட்பட அடிப்படை நிகழ்தகவுக் கோட்பாடு, கணித மடக்கையினைப் பயன்படுத்தல்

*புள்ளிவிபரவியல் :*

* தரவுகளின் சேகரிப்பு, சமர்ப்பித்தல் மற்றும் பொருளுரைத்தல்
* அடுக்கு நிகழ்வுப் பகிர்வுகளின் பகுப்பாய்வு சராசரிகளும், மதிப்புச் சிதறலும், நியம வேறுபாடு, அடுக்கு நிகழ்வு வளைகோடுகள்
* நிகழ்தகவு பகிர்வும் அதன் பிரயோகமும்
* மாதிரித் தெரிவும் மாதிரிப் பகிர்வீடுகளின் முக்கியத்துவமான கோட்பாடுகளும், நியம வழு, மாதிரித் தெரிவுமுறைகள், முக்கியத்துவத்தை அறிவதற்கான பரீட்சைகள்
* *காலத்தொடர்கள்.-* காலத் தொடரொன்றின் உறுப்புக்கள், போக்குகள் பருவ, சுழல் வட்ட மற்றும் ஒழுங்கற்ற முறைகள்
* குறிவரைத் தொடர்புகள், புள்ளிவிபரக் குறிவரைவு அட்டவணைகள்

(v) ***சுற்றாடல்.-*** பின்வரும் விடயங்கள் தொடர்பாக மூன்று மணித்தியாலங்களிலான ஒரு வினாத்தாள் (150 புள்ளிகள்) பொருளியல் கோட்பாடுகள், சட்டம் மற்றும் பொது வர்த்தக அறிவு

*பொருளியல் :*

* பொருளியல் கற்கையின் தன்மை, முக்கியத்துவம், விலைப்பொறிமுறை, கேள்வியும் நிரம்பலும், கிரயமும் வருவாயும், இலாபத்தை உச்சப்படுத்தல், உற்பத்திக் காரணிகள், போட்டியும் தனியுரிமையும்
* இலங்கைப் பொருளாதாரத்தின் குணாம்சங்கள், தேசிய வருமானம், மொத்த தேசிய உற்பத்தி, சென்மதி நிலுவை, பணவீக்கம், பொருளாதார மந்தம், நிலையான மற்றும் மிதக்கும் செலாவணி வீதங்கள், மதிப்பிறக்கம் போன்ற பொருளியல் பிரச்சினைகள்
* *பணமும் வங்கியியலும்.-* பணத்தின் தன்மை, பணத்தின் உருவாக்கமும் செயற்பாடுகளும், பணத்தின் பெறுமதி, பொது விலை மட்டம், இலங்கை மத்திய வங்கி, வர்த்தக வங்கிகள், கடன் மற்றும் சேமிப்பு நிறுவனங்களின் பணிகள்

*சட்டம் :*

* இலங்கையில் உள்ள பலவித சட்டமுறைகளின் வரையறை பற்றிய வரலாற்றுச் சுருக்கக் குறிப்பும் அவை தொடர்புறும் விதமும், நீதிமன்றங்கள், தொழில் மன்றங்கள், கைத்தொழில் நீதிமன்றங்கள் ஆகிய வற்றின் கட்டமைப்பும் பணிகளும், இலங்கையில் நீதி பரிபாலனத்தில் ஈடுபட்டுள்ள நீதிபதிகளினதும் பிற முக்கிய சட்ட உத்தியோகத்தர்களினதும் பணிகள்.
* ஒப்பந்த இயல்புகள், இயற்கையான மற்றும் சட்ட ரீதியான ஆள், முகவராண்மை, பிரதிநிதித்துவம், அதிகாரத் திற்கப்பாற்பட்ட சித்தார்த்தம்

*பொது வர்த்தக அறிவு :*

* முறைமைகள் நடைமுறைகள் உட்பட அலுவலக அமைப்பு கோவைப்படுத்தலும், தொகுத்து அட்ட வணைப்படுத்தலும், அலுவலக சாதனங்கள், கூட்டங்களை ஒழுங்குசெய்தல், கூட்ட நிகழ்ச்சிக் குறிப்புக்கள், அறிக்கைகள் எழுதுதல்
* நிறுவனக் கட்டமைப்பு, அமைப்பு வரைபடம், பதவியணியின் ஒவ்வொரு மட்டத்திற்கிடையிலுமான உறவு, ஒருமுகப்படுத்துதல், பன்முகப்படுத்துதல், தனி வியாபாரம், பங்குடைமை, கூட்டு முயற்சிகள், கம்பனி, கூட்டுறவு அமைப்பு, அரசாங்க கூட்டுத்தாபனங்கள் ஆகியன உட்பட வணிக அமைப்புக்கள்
* காப்புறுதிக் கோட்பாடுகளும் வகைகளும், இலங்கை ஏற்றுமதி கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனம்
* கடல், தரை, ஆகாய மார்க்கப் பொருட்களைக் கொண்டு செல்வதற்கான கப்பற் கேள்வு, தாமதக் கட்டணம்
* கைமாறத்தக்க ஆவணங்கள், கைமாறல் என்பதன் அர்த்தம், காசோலைகள், நாணயமாற்று உண்டி யல்கள், புறக் குறிப்புக்கள், குறுக்குக் கோடிடல், ஏற்றுக்கொள்ளல், மதிப்பிழத்தல்
* இலங்கையில் கூட்டுறவு அமைப்புக்களினால் நிறைவேற்றப்படும் பணிகள்
* முதலீட்டு கோட்பாடுகள், இலங்கையில் பங்குப் பரிவர்த்தனை
* விற்பனை ஒப்பந்தம், பொருட்களின் உரித்தினை ஒப்படைத்தல், நிபந்தனைகளும் பற்றாணைகளும், வாடகைக் கொள்வனவு, தவணைக் கட்டண அடிப்படையில் கொள்வனவு அடங்கலான பொருள் விற்பனைகள்
* நடைமுறைகள், ஆவணங்கள், ஏற்றுமதி இறக்குமதி முறைகள், கொடுப்பனவு முறைகளும் நியதிகளும், சுங்க மற்றும் உற்பத்தித் தீர்வைகள் என்பன உட்பட சர்வதேச வர்த்தகம்
* தேசிய அபிவிருத்தி வங்கி, அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம், உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் என்பவற்றின் பணிகள் உட்பட அபிவிருத்தி நிதி

மாதிரி விண்ணப்பப்படிவம்

பரீட்சை சுட்டெண் : [ ]

(அலுவலக பாவனைக்கு மட்டும்)

***கணக்காய்வு பரீட்சகர் சேவையில் II ஆம் தரத்திற்கு கணக்காய்வு பரீட்சகர்களை ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2016***

Open Competitive Examination for Recruitment of Audit Examiners to Grade II of the Audit Examiner's Service - 2016

*(ஏ4 அளவுள்ள 2 கடதாசியில் தலைப்பு இல. 1-4 வரை முதலாம் பக்கத்திலும், 4-6 வரை இரண்டாம் பக்கத்திலும், 7 முதல் 9 வரை மூன்றாம் பக்கத்திலும் மிகுதி நான்காம் பக்கத்திலுமாகத் தயாரிக்கவும்.)*

பரீட்சைக்குத் தோற்றுவதற்கு எதிர்பார்க்கும் நகரமும் நகர இலக்கமும் :

| | நகரம் | நகர இல. |
|---|---|---|
| | [ ] | [ ] |

கொழும்பு - (Colombo) - 1
யாழ்ப்பாணம் - (Jaffna) - 2

(நகரத்தினை ஆங்கில பெரிய எழுத்துக்களிலும் நகர இலக்கத்தினையும் பெட்டிக்குள்ளும் இடவும்.)

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :

சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4 ☐

(உரிய இலக்கத்தினை கூட்டிற்குள் இடுக.)

(மொழி மூலத்தை மாற்றுவதற்குப் பின்னர் இடமளிக்கப்பட மாட்டாது.)

1. 1.1 முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
(உதாரணம் : CHANDRASEKARA THAKSHILA SAMAN KUMARI)

1.2 இறுதிப் பெயரை ஆரம்பத்திலும் ஏனைய பெயர்களிலுள்ள முதலெழுத்துக்களை இறுதியிலும் குறிப்பிட்டு பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
(உதாரணம் : KUMARI, S. T. S.)

1.3 முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :----.

2. முகவரி :

2.1 நிரந்தர முகவரி (அனுமதி அட்டை அனுப்பிவைக்கப்பட வேண்டியது) (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

2.2 நிரந்தர முகவரி (சிங்களத்தில்/தமிழில்) :----.

2.3 அலுவலக முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

(அரசாங்க சேவை/ மாகாண அரசாங்க சேவை ஆகிய வற்றிலுள்ள உத்தியோகத்தர்கள் அலுவலக முகவரியை வழங்க வேண்டும்.)

3. 3.1 பால் (பெண்-1, ஆண்-0) : ☐
(உரிய இலக்கத்தைக் கூட்டில் இடுக.)

3.2 தேசிய அடையாள அட்டைஇல. :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

3.3 விவாக நிலை (விவாகமானவர்-2, விவாகமாகாதவர்-1) : ☐
(உரிய இலக்கத்தைக் கட்டத்தில் இடுக.)

3.4 பிறந்த திகதி :

ஆண்டு : ☐☐☐☐ மாதம் : ☐☐ திகதி : ☐☐

3.5 2016.06.07 ஆந் திகதியன்று வயது :

வருடங்கள் : ☐☐ மாதங்கள் : ☐☐ நாட்கள் : ☐☐

4. தேசிய இனத்தொகுதி :

சிங்களவர்-1, தமிழர்-2,
இந்தியத் தமிழர்-3,
முஸ்லிம்-4, ஏனையோர்-5 ☐

(உரிய இலக்கத்தைக் கட்டத்தில் இடுக.)

5. (i) இந்தப் பரீட்சைக்குத் தோற்றுவதற்காக நீங்கள் பெற்றுள்ள தகைமைகள் :

| பெறப் பட்ட தகைமை | தகைமை பெற்ற திகதி | பாடங்கள் | பெறுபேறு கள் வழங் கப்பட்ட திகதி | தகைமை பெறப் பட்ட நிறுவகம் |
|---|---|---|---|---|
| | | | | |

(ii) கல்விப் பொதுத் தராதர (சா. த.) பரீட்சையில் சித்தியெய்திய பாடங்கள் :

(அ) பரீட்சை ஆண்டு :----.
பரீட்சை சுட்டெண் :----.

| பாடங்கள் | பெறப்பட்ட சித்திகள் |
|---|---|
| | |

6. மேலதிக கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகள் :----.

7. தமது நடத்தை மற்றும் இயலுமை பற்றி சான்றுறுதிப்படுத்தக்கூடிய விண்ணப்பதாரியால் பெயரிடப்படும் இரண்டு நபர்களின் பெயர் மற்றும் முகவரி :----.

(i) :----.
(ii) :----.

8. அரசாங்க சேவை/ மாகாண அரசாங்க சேவையில் இந்தப் பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகள் இவற்றைப் பூர்த்தி செய்யவும் :

(i) நீங்கள் சார்ந்திருக்கும் சேவை/திணைக்களம், தரம் :----.
(ii) அச்சேவைக்கு/திணைக்களத் தரத்திற்கு நிரந்தரமாக்கப் பட்ட திகதி :-

ஆண்டு : ☐☐☐☐ மாதம் : ☐☐ திகதி : ☐☐

9. பணப் பற்றுச்சீட்டை கழராதவாறு பெட்டிக்குள் ஒட்டவும் :

☐

(i) பற்றுச்சீட்டின் இலக்கம் :----.
(ii) பரீட்சைக் கட்டணம் செலுத்திய திகதி :----.
(iii) பரீட்சைக் கட்டணம் செலுத்திய நிலையம் :----.
(iv) செலுத்திய பணத்தொகை (ரூபா) :----.

(பணப்பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதி ஒன்றை தம்வசம் வைத்திருப்பது பின்தொடர் நடவடிக்கைகளுக்கு அவசிய மானதாகும்.)

10. **விண்ணப்பதாரியின் உறுதியுரை :**
இங்கு தரப்பட்டுள்ள தகவல்கள் என்னுடைய நம்பிக்கைக்கும் அறிவிற்கும் எட்டியவரை உண்மையானவை என்றும் பரீட்சைக் கட்டணத்திற்கான கொடுப்பனவாக .......................... ஆந் திகதியிடப்பட்ட ............................................ இலக்கம் கொண்ட பற்றுச்சீட்டை இணைத்துள்ளேன் என்றும் பிரகடனப்

படுத்துகின்றேன். மேலும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்பட்ட சட்டங்கள், விதிகளின் பிரகாரம் செயற்படுவதற்கும் இப்பரீட்சை தொடர்பான நிபந்தனைகளின் பிரகாரம் நான் தகுதியற்றவன் எனக் காணுமிடத்து இப்பரீட்சைக்கு முன்னர், பரீட்சையின்போது அல்லது பரீட்சைக்குப் பின்னர் என்னுடைய பரீட்சார்த்தித் தன்மையை இரத்துச் செய்வதற்காக எடுக்கப்படும் எந்தத் தீர்மானத்திற்கும் நான் உடன்படுகின்றேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

11. **விண்ணப்பதாரியின் கையொப்பத்தினை உறுதிப்படுத்தல்** (வர்த்தமானி அறிவித்தலின் 7 (ஊ) ஆம் பந்தியைப் பார்க்கவும்.) :

இவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி ......... ............................... எனும் பெயருடைய விண்ணப்பதாரியை நான் தனிப்பட்ட ரீதியாக அறிந்தவர் எனவும் அவர், 2016, ................... ...................... எனது முன்னிலையில் கையொப்பமிட்டார் என்றும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
உறுதிப்படுத்துபவரின் கையொப்பமும்
இறப்பர் முத்திரையும்.

உறுதிப்படுத்துபவரின் முழுப்பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
திகதி :----.

12. **திணைக்களத் தலைவரின் சான்றிதழ் :**
(தற்போது அரசாங்க சேவையில்/மாகாண அரசாங்க சேவையில் கடமையாற்றுகின்ற திறந்த போட்டிப் பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரிகளுக்காக)

இவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி ........ ................................ எனும் பெயருடைய விண்ணப்பதாரி ........... ......................................... ஆந் திகதி முதல் இவ் அலுவலகத்தில் வேலை செய்கின்றார் என்றும், அவருடைய வேலையும் வருகையும் நடத்தையும் திருப்திகரமாக இருக்கின்றன என்றும் மேலே 1 மற்றும் 8 ஆம் பிரிவில் குறிப்பிட்டுள்ள விபரங்கள் அனைத்தையும் இவ் அலுவலகத்தில் உள்ள ஆவணங்களுடன் நான் தனிப்பட்ட ரீதியாகப் பரீட்சித்துப் பார்த்தேன் என்றும், அவை சரியானவை என்றும் அவர் இப்பதவிக்காக தெரிவுசெய்யப்படின் தற்போது வகிக்கும் பதவியிலிருந்து விடுவிக்க முடியும்/ முடியாது என்றும் 2016, ............................................ ஆந் திகதி அவர் எனது முன்னிலையில் கையொப்பமிட்டார் என்றும் இத்தால் சான்றுபடுத்துகின்றேன்.

----,
திணைக்களத் தலைவரின் அல்லது
அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரின்
கையொப்பம் மற்றும் இறப்பர் முத்திரை.

சான்றுபடுத்துபவரின் முழுப்பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
திகதி :----.

5-94

**அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய புதிய விகிதங்கள்**
***2013 சனவரி 01 ஆந் திகதி தொடங்கி அமுலுக்கு வந்தது***
**"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை"**
**(வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது.)**

**எல்லா வர்த்தமானிகளையும் www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.**

*1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவார்.*

*2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன்* ***அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8*** *அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.*

*3. அலுவலக நேரம் மு. ப. 8.30 மணி முதல் பி. ப. 4.15 மணி வரையாகும்.*

*4. பணம் கொடுக்கல் வாங்கல் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 3.00 மணிவரை நடைபெறும்.*

***5. சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படுதல் வேண்டும்.*** *தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித் தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும். தபால் அலுவலகம், "பொரல்லை" என்பதே மணி ஓடர்களுக்கான செலுத்தப்படும் அலுவலகமாகும்.*

***6. நகலைக் கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் ரைப் அடித்தல்*** *பிழைகளையும் காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும். கையெழுத்துப் பிரதி எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.*

***7. கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.***

*8. வியாபார விளம்பரங்களும் பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.*

*9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்பட வேண்டிய விளம்பரங்கள் 'சுப்றீம் கோட்' புறொக்டரால் கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்பட மாட்டா.*

*10. அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு :-*

| | ரூபா ச. |
|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | 13700 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலமும் அல்லது அதன் பகுதிக்கும் | 13700 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் அரை பக்கம் | 1,30000 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | 2,60000 |

*ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.*

***11. வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி*** *வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.*

***12. ஒவ்வொரு மாதமும் முதற்கிழமை வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் "அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8" அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.***

***13. இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பெறப்படாமை, முகவரி மாற்றம் போன்ற எல்லாத் தொடர்புகளுக்கும், கொழும்பு 8, அரசாங்க அச்சுத் திணைக்களம், அரசாங்க அழுத்தகருக்கே எழுதுங்கள்.***

***14. 2013 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து மீளவாய்ந்த புதிய சந்தா விபரம் :-***

| இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | முழு வருடத்திற்கு மான கட்டணம் ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வதுதொகுதி | 4,160.00 | 9,340.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 580.00 | 950.00 |
| III வது தொகுதி (ஆக்க உரிமை மற்றும் வியாபார உரிமை அடையாள விளம்பரங்கள் முதலியன) | 405.00 | 750.00 |
| I வது பகுதி முழுவதும் (I, II, III தொகுதிகள் உட்பட) | 890.00 | 2,500.00 |
| II ஆவது பகுதி (சட்ட சம்பந்தமானது) | 860.00 | 450.00 |
| III வது பகுதி (காணிகள்) | 260.00 | 275.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 2,080.00 | 4,360.00 |
| V வது பகுதி (பயண போக்குவரத்து சேவை முதலிய விண்ணப்பங்களுக்கான பட்டியல் மற்றும் புத்தகப் பட்டியல்) | 1,300.00 | 3,640.00 |
| VI வது பகுதி (யூரிமார் பெயர்ப்பட்டியல், வைத்திய அலுவலர் பட்டியல், பிறப்பு, இறப்பு பதிவாளர் பட்டியல் முதலியன) | 780.00 | 1,250.00 |
| அதிவிசேட வர்த்தமானி | 5,145.00 | 5,520.00 |

**முழு ஆண்டின் இறுதி வரைக்கும் பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாத காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.**

**தனிப்பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்**

| | ரூபா ச. விலை ரூபா ச. | ரூபா ச. தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வதுதொகுதி | 4,160.00 | 9,340.00 |
| I வது தொகுதி | 40.00 | 60.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 25.00 | 60.00 |
| III வது தொகுதி | 15.00 | 60.00 |
| I வது பகுதி (I, II, III தொகுதிகள் உட்பட) | 80.00 | 120.00 |
| II வது பகுதி | 12.00 | 60.00 |
| III வது பகுதி | 12.00 | 60.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 23.00 | 60.00 |
| V வது பகுதி | 123.00 | 60.00 |
| VI வது பகுதி | 87.00 | 60.00 |

***எல்லா தனிப்பிரதிகளையும் கொழும்பு 5, பொல்ஹேன்கொடை, கிருளப்பனை மாவத்தை, இல. 163 எனும் முகவரியிலுள்ள அரச வெளியீட்டு பணியகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.***

# வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

**அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்களை ஏற்றுக்கொள்வார்.**

**முக்கிய கவனிப்பு.**- இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான கட்டணங்கள் யாவும் **அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.**

**அட்டவணை-2016**

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|---|---|
| **மே** | .. | வெள்ளி | 06.05.2016 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 22.04.2016 |
| | | வெள்ளி | 13.05.2016 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 29.04.2016 |
| | | வெள்ளி | 20.05.2016 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 06.05.2016 |
| | | வெள்ளி | 27.05.2016 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 13.05.2016 |
| **யூன்** | .. | வெள்ளி | 03.06.2016 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 20.05.2016 |
| | | வெள்ளி | 10.06.2016 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 27.05.2016 |
| | | வெள்ளி | 17.06.2016 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 03.06.2016 |
| | | வெள்ளி | 24.06.2016 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 10.06.2016 |
| **யூலை** | .. | வெள்ளி | 01.07.2016 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 17.06.2016 |
| | | வெள்ளி | 08.07.2016 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 24.06.2016 |
| | | வெள்ளி | 15.07.2016 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 01.07.2016 |
| | | வெள்ளி | 22.07.2016 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 08.07.2016 |
| | | வெள்ளி | 29.29.2016 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 15.07.2016 |

**டபிள்யூ. ஏ. ஏ. ஜீ. பொன்சேக்கா,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2016 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.